22.04.2025 S.C.No.138 of 2017 P.W.51 – Govindhasamy

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

(A1 to A6 present)

குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.50 P.M.

**5 மற்றும் 6 ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

கே: இவ்வழக்கு பொறுப்பு எடுத்துக்கொள்வதற்கு முன்பு எந்த காவல் நிலைய பொறுப்பில் இருந்தீர்கள்?

ப: வேப்பங்குப்பம் காவல் நிலையத்தில் இருந்தேன்.

கே: இந்த வழக்கை உங்களுக்கு Handover செய்தது யார்?

ப: அப்போது இருந்த ஆம்பூர் காவல் உட்கோட்ட காவல் துணைக்கண்காணிப்பாளரின் உத்தரவின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

கே: அப்போது வேப்பங்குப்பம் காவல் நிலையத்தில் உங்களின் பணி என்ன?

ப: அப்போது வேப்பங்குப்பம் காவல் நிலைய பணியிலிருந்து நான் விடுவிக்கப்படவில்லை.

கே: வேப்பங்குப்பம் காவல் நிலையத்தில் அப்போது என்ன பணியில் இருந்தீர்கள்?

ப: காவல் ஆய்வாளராக பணியில் இருந்தேன்.

கே: வேப்பங்குப்பத்தை சார்ந்த காவல் ஆய்வாளராக உங்களுக்கு காவல் நிலையத்தில் என்னென்ன பணி இருக்கும்?

ப: வேப்பங்குப்பம் காவல் நிலையத்தில் மட்டுமே இருக்கும்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையம் ஒரு ஆய்வாளரின் பொறுப்பில் உள்ள காவல் நிலையம் என்றால்?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலையம் ஒரு வட்டக்காவல் நிலையம் ஆகும்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு பொறுப்பு அதிகாரியாக அப்போது இருந்த SHO யார் என்றால்?

ப: நான் பொறுப்பேற்கும்போது அந்த காவல் நிலையத்தின் SHO யார் என்று எனக்கு தெரியாது. அப்போது எஸ்எஸ்ஐ ரவி பொறுப்பு அதிகாரியாக இருந்தார்.

கே: தங்களிடம் இந்த வழக்கின் பொறுப்பு கொடுக்கப்பட்டபின் இந்த வழக்கின் தன்மையை புரிந்துக்கொண்டுதான் புலன் விசாரணை செய்தீர்களா?

ப: ஆமாம். புரிந்துக்கொண்டுதான் புலன் விசாரணை செய்தேன்.

கே: இந்த வழக்கு எது சம்பந்தமான வழக்கு என்றால்?

ப: காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்கள் விசாரித்து அனுப்பி வைத்தபின் இறந்துவிட்டதாகவும் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

கே: இந்த வழக்கில் புகார் கொடுத்தவரின் பெயர் என்ன?

ப: அலி அக்பர்.

கே: 26.06.2015 அன்று அலி அக்பர் தங்களிடம் ஒரு புகார் மனு கொடுத்துள்ளார் என்றால்?

ப: இல்லை.

கே: அலி அக்பர் இரண்டு மனுக்கள் தங்களிடம் கொடுத்தாரா?

ப: அலி அக்பர் என்னிடம் நேரடியாக 27.06.2015 அன்று 00.15

மணிக்கு கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

கே: தங்களிடம் இரண்டு புகார்கள் கொடுக்கப்பட்டது, முதல் புகாருக்கு CSR கூட தரப்படவில்லை என்றும் இரண்டாவது புகார் Created and Fabricated மனுவின் அடிப்படையில் தாங்கள் தயாரித்த முதல் தகவல் அறிக்கை என்றால் ?

ப: சரியல்ல.

கே: அலி அக்பரின குு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் இது சம்பந்தமாக நான் நடவடிக்கை எடுக்கச்சொல்லி ஆம்பூர் நகர காவல் நிலையத்திடம் வந்திருந்த பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் வேப்பங்குப்பம் காவல் ஆய்வாளராகிய தங்களிடம் புகார் கொடுத்தேன் அந்த புகார் கொடுத்த உடனே த.மு.மு.க. கட்சியை சேர்ந்த ஆம்பூர் எம்எல்ஏ அஸ்லாம் பாஷாவுடன் இருக்கும் த.மு.மு.க. முக்கிய பொறுப்பில் உள்ள ஷமீல் அகமது என்பவர் யாருடைய பேச்சையோ கேட்டுக்கொண்டு சிறிய துண்டுச்சீட்டில் எழுதியிருந்த பெயர்களை சேர்த்து எழுதிக்கொண்டு வந்து ஒரு கையில் பிடித்துக்கொண்டு அதில் என்னை கையெழுத்து போடச்சொல்லி என்னை கட்டாயப்படுத்தி கையெழுத்து போட வைத்தனர் அந்த மனுவையும் தங்களிடம் கொடுக்க வைத்தனர் என்று உள்ளது என்றால் ?

ப: அலி அக்பர் என்னிடம் கொடுக்கப்பட்ட முதல் மனுவின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அதன் பிறகு வாக்குமூலம் பதிவு செய்தபோது அவர் எந்த மனநிலையில் இருந்தார் என்று எனக்கு தெரியாது. என்னிடம் கொடுத்த மனுவிற்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

கே: தங்களிடம் இரண்டு மனுக்கள் கொடுக்கப்பட்டன என்று தாங்கள் தங்கள் விசாரணையில் அவர் தெளிவாக சொல்லியும் தாங்கள் இங்கு வந்து சாட்சி சொல்லும்போது அவர் எந்த மனநிலையில் இருந்தார் என்ற வார்த்தையை பயன்படுத்தி இந்த நீதிமன்றத்தில் தவறான ஒரு அபிப்ராயத்தை உருவாக்குவதற்காக ஒரு பொய்யான சாட்சி சொல்கிறீர்கள் என்றால்?

ப: அதை நான் மறுக்கிறேன்.

கே: எ.த.சா.ஆ.1–ல் ஏதாவது ஒரு இடத்தில் காவல் ஆய்வாளர்கள் சேர்ந்து அடித்தார்கள் என்று உள்ளதா என்றால்?

ப: 26.06.2015 என்று கொடுக்கப்பட்ட K.M.அலி அக்பர் கொடுத்த புகார் மனுவானது ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார். நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு பெறப்பட்ட இந்த புகார் மனுவை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

கே: தாங்கள் ஆம்பூர் காவல் நிலையத்தில் புகாரை பெற்றதாக சொல்லியுள்ளீர்கள் ஆனால் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் தங்களிடம் மனு கொடுக்கப்பட்டதாக சொல்லியுள்ளீர்கள் என்றால்?

ப: சரியல்ல. என்னிடம் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அதன் பிறகு ஆம்பூர் நகர காவல் ஆய்வாளரிடம் கொடுக்கப்பட்ட இரண்டு புகார் மனுக்கள் பின்னிட்டு பெறப்பட்டதை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

கே: தாங்கள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததற்கான மனுவில் காவல் ஆய்வாளர் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் பள்ளிக்கொண்டா என்று முகவரியிடப்பட்டு கொடுத்த மனுவின் அடிப்படையில் இந்த முதல் தகவல் அறிக்கை போடப்பட்டது என்றால்?

ப: சரியல்ல. பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் நான் ஆஜரில் இருந்தபோது அலி அக்பர் கொடுத்த புகாரில் பெறுநர் உயர்திரு காவல் துணைக்கண்காணிப்பாளர், நகர காவல் நிலையம் ஆம்பூர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதை பெற்று ஆம்பூர் டிஎஸ்பி அவர்களின் வாய்மொழி உத்தரவின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் மனு பெறப்படும்போது அதில் ஆம்பூர் நகர காவல் நிலைய முகவரி இருப்பதால் அதை மறுப்பு தெரிவித்தீர்களா?

ப: இல்லை. எந்த ஒரு புகார் மனுவும் எந்த ஒரு காவல் நிலையத்தில் கொடுத்தாலும் புகாரின் சந்ததியின் முக்கியத்துவத்தை பொறுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளராக தாங்கள் இருக்கும்போது தங்களிடம் கொடுக்கப்படும் மனுவில் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் என்று முகவரியிட்டு கொடுக்கப்படும்போதுதான் தாங்கள் முதல் தகவல் அறிக்கை பதிய வேண்டும் என்றால்?

ப: சரியல்ல.

கே: முதன்முதலில் கொடுக்கப்பட்ட புகார் மனுவில் அலி அக்பர் எந்த எதிரிகளின் பெயர்களையும் குறிப்பிடவில்லை என்றும் 2 வதாக பெறப்பட்ட புகார் மனுவிற்கு தாங்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது தவறு என்றால்?

ப: நான் அதை மறுக்கிறேன்.

கே: இந்த வழக்கு Lockup death ஆ அல்லது சாதாரணமான வழக்கா என்றால்?

ப: இறந்துபோன ஷமீல் பாஷாவை பள்ளிக்கொண்டா காவல் ஆய்வாளர் மார்டின் மற்றும் பிற காவலர்கள் அழைத்து வந்து விசாரித்து அனுப்பி வைக்கப்பட்டவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது மருத்துவமனையில் இறந்துவிட்டார் என்று கொடுக்கப்பட்ட புகார் என்பதால் Police custody–ல் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட வழக்கு ஆகும்.

கே: Custody –க்கு விளக்கம் தரவும்?

ப: போலீஸ் காவல் என்பதே Custody ஆகும்.

கே: போலீஸ் காவலில் கைது செய்யப்பட்டவர் Custody–ல் வைத்திருக்கும்போது துன்புறுத்துலுக்கு உட்பட்டு இறந்து போவதே Police Custody death என்றால்?

ப: சரிதான்.

கே: அப்படி Police Custody death இருந்தால் தான் Judicial inquiry மற்றும் Police Investigation–ல் அது வரும் என்றால்?

ப: சரிதான்.

கே: Judicial inquiry என்பது இறப்பிற்கான காரணத்தையும் Formal என்று எடுத்துக்கொள்ளலாம் என்றால்?

ப: சரிதான்.

கே: அதேபோல் அதற்கு இணையாக உள்ள போலீஸ் விசாரணை என்பது காவல் நிலையத்தில் நடந்ததாக உள்ள சாட்சியங்களை சேகரிப்பதும் அதை நீதிபதி அவர்களுக்கு இறப்பிற்கான காரணத்தை கண்டுபிடிக்க உதவுவதற்காகவும் நடத்தப்படுகின்ற விசாரணை ஆகும் என்றால்?

ப: சரிதான்.

கே: இந்த வழக்கை விசாரணைக்கு எடுக்கும்போது நீங்கள் திரித்து கூறப்பட்ட எதிரிகளின் பெயர்களை மோசடியாக சேர்த்த அந்த எதிரிகள் எந்த காவல் நிலையத்திற்கு உட்பட்டவர்கள் எங்கிருந்து வந்தார்கள் யார்யாரால் அனுப்பப்பட்டார்கள் என்ற விஷயங்களை தெரிந்துக்கொள்ள தாங்கள் முற்பட்டீர்களா ?

ப: இல்லை. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சிபிசிஐடிக்கு மாற்றம் செய்யப்பட்டது. மூன்றிலிருந்து ஐந்து நாட்களில் சிபிசிஐடிக்கு வழக்கு மாற்றம் செய்யப்பட்டதால் விவரமாக ஆழமாக என்னால் விசாரணை செய்ய முடியவில்லை.

கே: Shadow duty மற்றும் Special team என்றால் என்ன என்று தங்களுக்கு தெரியுமா என்றால்?

ப: தெரியும்.

கே: Special team என்பது SP, DSP, DIG போன்றவர்கள் மிகப்பெரிய குற்றங்கள் நடக்ககூடாது என்பதற்காக இந்த Team–ஐ உருவாக்குவார்கள் என்றால்?

ப: சரிதான்.

கே: Shadow duty என்றால் என்ன?

ப: ஒரு நபரை காவல் துறையினர் கண்காணிப்பது.

கே: தாங்கள் இந்த வழக்கை ஒப்படைத்த பின் தாங்கள் குற்றம் நடந்ததாக சொல்லப்படும் 15.06.2015 முதல் 19.06.2015 வரை என்ன நடந்தது என்பதை தெரிந்துக்கொள்வதற்காக பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் உள்ள SHO ஐ விசாரித்தீர்களா? நீங்கள் செய்த விசாரணையை அங்கிருக்கும் General dairy ல் குறிப்பிடப்பட்டதா?

ப: 15.06.2015 முதல் 19.06.2015 வரை இறந்துபோன ஷமீல் பாஷாவை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தீர்களா என்று கேட்டபோது 16.06.2015 ம் தேதி திரு.எஸ்எஸ்ஐ ரவி என்பவர்தான் ஷமீல் பாஷாவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த நகலும், 19.06.2015–ம் தேதி ஷமீல் பாஷாவை Bindover செய்த ஆவணத்தையும் நிலைய எழுத்தர் கொடுத்ததை நான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கு பதிவு செய்த பிறகு ஆம்பூர் நகரத்தில் கலவரம் ஆனதால் பல்வேறு பணியின் காரணமாக மேற்கண்ட நபர்களை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ய அப்போதைய சூழலில் முடியவில்லை.

கே: தாங்கள் இந்த வழக்கு சம்பந்தமாக ஒரு சாட்சியை விசாரிக்கிறீர்கள் என்றால் அது கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலம் என்றால்?

ப: சரிதான்.

கே: எஸ்எஸ்ஐ ரவியை சந்தித்து சில தகவல்களை விசாரித்தீர்கள் என்றால் அவரின் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தை ஏன் நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை?

ப: 16.06.2015 ம் தேதி ஷமீல் பாஷாவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த அசல் ஆவணத்தையும் 19.06.2015 ம் தேதி ஷமீல் பாஷாவை Bindover செய்த அசல் ஆவணத்தையும் நிலைய எழுத்தரிடம் நான் பெற்றேனே தவிர எஸ்எஸ்ஐ ரவியிடம் நான் விசாரிக்கவில்லை.

கே: இந்த வழக்கானது காவல் நிலையம் சம்பந்தப்பட்டதாக இருக்கும் காரணத்தினால் SHO ஐ கண்டிப்பாக தாங்கள் விசாரித்துதான் ஆக வேண்டும் என்றும் மேலும் அங்குள்ளவர்களை விசாரிக்க அவரிடம் அனுமதி பெற வேண்டும் என்றால்?

ப: சரியல்ல. அன்றைய சூழ்நிலையில் பணிச்சுமையின் காரணத்தாலும், ஆம்பூர் கலவரம் நடந்ததாலும் நான் ரவியை விசாரிக்கவில்லை. நான் பொறுப்பு ஆய்வாளராக அப்போது இருந்ததால் காவல் நிலையத்தில் உள்ள காவலர்களை விசாரிக்க SHO ன் அனுமதி பெற தேவையில்லை.

கே: தாங்கள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் அப்போது இருந்த SHO ரவியை விசாரிக்கும்போது காவல் நிலைய GD ஐ பார்த்தீர்களா என்றால்?

ப: GD ஐ பார்த்தேன். பதட்டமான சூழ்நிலையில் இருந்ததால் நான்

பொறுப்பேற்றதை பதிவு செய்தேன். மற்ற விவரத்தை நான் பார்க்கவில்லை.

கே: பொதுவாக ஒரு காவல் நிலையத்தில் தாங்கள் ஆய்வாளராக இருக்கும்பட்சத்தில் கண்டிப்பாக GD–யை பார்த்து கையெழுத்து போடவேண்டும் என்றால்?

ப: சரிதான். அந்த சூழ்நிலையை பொறுத்து.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 15.06.2015 முதல் 19.06.2015 வரை நடந்த அனைத்து அலுவல் சார்ந்த விஷயங்களை பற்றிய நடைமுறைகளை அந்த காவல் நிலைய ஆவணங்களை பார்த்து ஏதேனும் தெரிந்துக்கொண்டீர்களா?

ப: ஆவணங்களை பார்த்தேன்.

கே: 16.06.2015ம் தேதிய ஜிடி–ல் கலைச்செல்வன், பாரா காவலர் முத்துக்குமரன், ரோல்கால் எஸ்எஸ்ஐ சிங்காரம், எஸ்எஸ்ஐ ரவி, அனுமந்தன், 345 பரத், சீனிவாசன் ஆகியோர் பள்ளிக்கொண்டா காவல் நிலைய பணியில் இருந்தார்கள் என்றால்?

ப: நான் 26.06.2015 அன்றுதான் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு நான் சென்றேன். அதற்கு முந்தைய தேதிய ஜிடியில் என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது.

கே: முதல் தகவல் அறிக்கை போட வேண்டும் என்றால் அதற்கு பின்புலமாக இருக்க வேண்டிய ஆவணம் ஜிடிதான் என்றால் ?

ப: சரிதான்.

கே: தாங்கள் 15.06.2015 முதல் 19.06.2015 வரை ஷமீல் பாஷாவை காவல் நிலையத்தில் வைத்து தாக்கப்பட்ட விஷயம் சம்பந்தமாக தங்களால் தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை

ஆதாரமாக உள்ள References, General Dairy of Pallikonda Police Station ல் உள்ளதா?

ப: உள்ளதா என்று நான் அப்போது பார்க்க போதிய நேரம் இல்லாததால் பார்க்க இயலவில்லை.

கே: விசாரணை அதிகாரியாக இருக்கும்பட்சத்தில் Custodial death என்று தாங்கள் முடிவெடுத்து விசாரிக்கின்ற நேரத்தில் இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் யார்யார் 15.06.2015 முதல் 19.06.2015 ஆகிய தேதிகளில் அந்த நிலையத்தில் பணிபுரிந்தார்கள் என்பவர்களை தாங்கள் விசாரித்து அறிய வேண்டும் என்றால்?

ப: சரிதான். அப்போதைய சூழ்நிலையில் ஆம்பூர் கலவரம் என்பதால் விசாரிக்க இயலவில்லை.

கே: Batch No.257 பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் யார் என்பது தெரியுமா?

ப: த.கா. திரு. அனுமந்தன்.

கே: அந்த காவல் நிலையத்தில் அனுமந்தனை மட்டும் விசாரித்திருக்கிறீர்கள். அப்போது அந்த காவல் நிலையத்தின் மற்ற காவலர்களை ஏன் விசாரிக்கவில்லை?

ப: 27.06.2015 ம் தேதி இறந்துபோன ஷமீல் பாஷா என்பவரின் பிரேத பரிசோதனை அலுவலாக சென்றதால் நான் அவர்களை விசாரிக்கவில்லை.

கே: 16.06.2015 மற்றும் 19.06.2015 ஆகிய தேதிகளில் சீனிவாசன், முத்துக்குமரன் மற்றும் எஸ்எஸ்ஐ ரவி ஆகியோர்கள் இருந்தபோதும் அவர்களை ஏன் தாங்கள் விசாரணை செய்யவில்லை என்றால்?

ப: அப்போதைய சூழ்நிலையில் ஆம்பூர் கலவரமாக இருந்ததால் அவர்களை விசாரிக்க இயலவில்லை.

5 மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 04.50 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.04.22 17:15:33 +0530